॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

பதிமூன்றாவது ரஹஸ்யம்.

॥ ஶ்ரீமத் ரஹஸ்யரத்நாவலி: ॥

ஸ்ரீமத் ரஹஸ்ய ரத்நாவளீ.

ஒன்றேபுகலென் றுணர்ந்தவர் காட்டத் திருவருளால்
அன்றே யடைக்கலங்கொண்ட நம்மத்திகிரித் திருமால்
இன்றே யிசையி னிணையடி சேர்ப்பரினிப்பிறவோம்
நன்றேவருவதெல்லாம் நமக்குப் பரமொன்றிலதே. 18

॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே ஶ்ரீ நிவாஸ ராமாநுஜ மஹாதேஶிகாய நம: ॥

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்

பகவத் விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ. உ.ப. வே. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியின்

ஸ்ரீமத்ரஹஸ்யரத்நாவளீ வ்யாக்யானம்.

ஸ்ரீமத் ரஹஸ்யரத்நாவளீ என்னும் இந்த ரஹஸ்யத்தில் ரஹஸ்யத்ரயங்களில் ப்ரதிபாதிக்கப்படுகிற தத்வஹித புருஷார்த்தங்களை ஸங்க்ரஹேண நிரூபிக்கத் திருவுள்ளம் பற்றி அவைகளை முதல்பாட்டில் ஸூசிப்பித்தருளுகிறார்—'ஒன்றே' என்றாரம்பித்து.

ப-ரை.] ஒன்றே-ஸ்ரீமந்நாராயணனாகிய ஒரு தத்வமே, புகல்-ப்ராப்யமும், உபாயமும், என்று, உணர்ந்தவர் - அறிந்தவர்களான

நம் ஆசார்யர்கள், காட்ட - நம்மை அவன் திருவடிகளில் ஸமர்ப்பிக்க, அன்றிக்கே உணர்ந்தவர், ஒன்றே புகல் என்று, காட்ட- தெரிவிக்க, திருவருளால் - தம்முடைய ஸ்ரீமத் க்ருபையினால், அன்றே - அப்பொழுதே, அடைக்கலம்கொண்ட - ரக்ஷ்ய வஸ்துவாக நம்மை அங்கீகரித்த, நம் அத்திகிரித் திருமால் - நமக்கு அஸாதாரணமான ஹஸ்திகிரியில் நித்யவாஸம் செய்கிற ச்ரிய:பதி, இசையில் - நாம் ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில், இன்றே- இப்பொழுதே, இணையடி - ஒன்றுக்கொன்று ஸத்ருசங்களான திருவடிகளில், சேர்ப்பர் - சேர்த்துவிடுவர், இனி - இதற்குப்பிறகு, பிறவோம் - ஸம்ஸாரத்தில் பிறக்கக்கடவோமல்லோம், வருவதெல்லாம் - இந்த ஸம்ஸாரிதசையில் இருக்கும்பொழுது வருகிற ப்ரியாப்ரியங்கள் எல்லாம், நன்றே - நல்லதுவே, நமக்கு ஒன்று - ஒரு விதமான, பரம் - பாரமும், இலதே - இல்லை. 18

இப்பாட்டுக்கு ஸ்ரீமத் ரஹஸ்ய ரத்நாவளீ ஹ்ருதயம் என்னும் அடுத்த ரஹஸ்யத்தில் இவர் தாமே வ்யாக்யானம் செய்தருளுகிற படியினால் இதற்கு வ்யாக்யானம் எழுதவில்லை.

இப்படிப் பொதுவாக ஒரு பாட்டில் ரஹஸ்யத்ரயங்களின் அர்த்தத்தை நிரூபித்தருளி மேல் முப்பது வாக்யங்களினால் இதையே விஸ்தாரமாக ப்ரதிபாதிக்கத் திருவுள்ளம்பற்றி முதல் பத்து வாக்யங்களினால் திருமந்த்ரத்தில் ப்ரணவம், த்வயத்தில் பூர்வகண்டம், சரமச்லோகத்தில் பூர்வார்த்தம், இவைகளின் அர்த்தத்தை நிரூபித்தருளுகிறார். மேல் பத்து வாக்யங்களினால் திருமந்த்ரத்தில் அநிஷ்ட நிவ்ருத்தியைச் சொல்லுகிற நமஸ்ஸப்தத்தின் அர்த்தத்தையும், த்வயத்தில் நமஸ்ஸப்தத்தின் அர்த்தத்தையும், சரமச்லோகத்தில் உத்தரார்த்தத்தில் மோக்ஷயிஷ்யாமி வரையிலான பதங்களின் அர்த்தத்தையும், ஸங்க்ரஹித்தருளுகிறார். இதற்கு மேல் பத்து வாக்யங்களினால் திருமந்த்ரத்தில் சதுர்த்தியிலும் த்வயத்தில் சதுர்த்யந்த பதங்களிலும், ஏற்பட்டதாயும் சரமச்லோகத்தில் ஸர்வ பாப விமோக்ஷணத்தினால் அர்த்தஸித்தமுமான புருஷார்த்த விசேஷத்தை நிரூபித்தருளுகிறார். முதல் பத்து வாக்யங்களில் திருமந்த்ரத்தில்

ஒரு ஜீவனுக்கொரு ஜீவன் தஞ்சமல்லன் (1). ஸ்ரீமானான நாராயணனொருவனுமே ஸர்வ ஜீவர்களுக்கும் தஞ்சம் (2) இஜ்ஜீவன் அநாதிகாலமும் அநுபவிக்கப் பெறாத ஸ்ரிய:பதியைப் பெறுகைக்கு ஹேதுவான உபாயத்தை ரஹஸ்யத்ரயத்தாலே உபதேசித்து அவ்வழியாலே

இருக்கும் ப்ரணவம் தைத்திரீயோபநிஷத்து முதலிய ப்ரமாணங்களை அநுஸரித்து ஆத்ம ஸமர்ப்பணபர மென்கிற யோஜனையைத் திருவுள்ளம் பற்றி பரஸமர்ப்பணத்தையும் நிரூபித்தருளி இருக்கிறார் என்றறியத்தக்கது. அதில் அகாரார்த்தத்தை நிரூபிக்க உபக்ரமித்து அயோகவ்யவச்சேதம் ப்ரதானமாதலால் அதை முற்பட நிரூபித்தருளுகிறார்—'ஒரு ஜீவனுக்கு' என்றாரம்பித்து. இங்கு பொதுவாக 'ஒரு ஜீவன்' என்றருளிச் செய்ததமையால் ரக்ஷகர் அல்லர் என்கிற விஷயத்தில் எத்தனையேனும் உயர்ந்தவர்களும் எத்தனையேனும் தாழ்ந்தவர்களும் துல்யர்கள் என்பது ஸூசிப்பிக்கப் படுகிறது. அப்படி ரக்ஷகராகாமைக்குக் காரணம் ஜீவத்வமேயன்றி ஜ்ஞான தௌர்ப்பல்யாதிகளல்ல என்பதும் தெரிவிக்கப்பட்டதாகிறது. அகாரம் லக்ஷ்மீவாசகம் என்கிற யோஜனையைத் திருவுள்ளம்பற்றி 'ஸ்ரீமானான' இத்யாதி அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இன்னாருக்கு ரக்ஷகன் என்று ப்ரதிஸம்பந்தி நிர்த்தேசமில்லாமையால் தன்னையொழிந்த மற்றவர்கள் எல்லோருக்கும் ரக்ஷகன் என்பது அர்த்தாத் ஸித்திக்கிறது என்கிற திருவுள்ளத்தினால் 'ஸர்வ' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ஆசார்யன் ரக்ஷகனென்று ப்ரமாணங்கள் சொல்லியிருக்க ஜீவாத்மா ஒருவருக்கும் ரக்ஷகத்வமில்லை' என்பது ஸங்கதமாகுமோ என்ன ஆசார்யன் ரக்ஷகனாகும் ப்ரகாரத்தை அருளிச் செய்கிறார்—'இஜ்ஜீவன்' என்றாரம்பித்து. ரஹஸ்யத்ரயத்தாலே—ரஹஸ்யத்ரயங்களாகிற ப்ராமாணத்தைக் கொண்டு என்றபடி. 'அவ்வழியாலே' இத்யாதி—ரஹஸ்யத்ரயார்த்தங்களாகிய மோக்ஷோபாய விசேஷங்களை உபதேசிக்கும் ஆசார்யனே ப்ரதானாசார்யன் என்பது இத்தால் ஸூசிதமாயிற்று. இனி லக்ஷ்மிக்கு உபாயவிசேஷணமாய்க்

ஆஶ்ரயணீயனுக்குத் தஞ்சமாகிறான் (3). ஸர்வஸ்வாமிநியாய் ஸர்வேஶ்வரனுக்கு ஶேஷமாய் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிஶயத்தாலும் அத்தலையில் வால்லப்யாதிஶயத்தாலும் ஸாபேக்ஷ

கொண்டு ரக்ஷகையா யிருக்கும் தன்மை 'ஸ்ரீமந் நாராயணன் ஒருவனுமே' என்கிற வாக்யத்திலே நிரூபிக்கப்பட்டபடியினால் புருஷகாரையாய் இருந்து ரக்ஷிக்கையாகிற விஶேஷ ரக்ஷகத்வத்தை நிரூபித்தருளுகிறார்— 'ஸர்வஸ்வாமிநியாய்' என்றாரம்பித்து. 'ஸஹதர்மசாரிணியான' என்பதினால் அவன் ஶரணாகத ஸம்ரக்ஷண வ்ரதத்தில் தீக்ஷிதனும்போது இவளும் கூடவே இருந்து ஸங்கல்பம் செய்கிறாள் என்பது இவ்விடத்திலும் அநுஸந்திக்கப்பட்டதாகிறது. இத்தலையில்—ஶேஷபூதர்களான ஆஶ்ரிதர்கள் திறத்தில். பகவானுக்கும் வாத்ஸல்யம் உண்டேயாகிலும் தண்டதானாகையினாலே அந்த வாத்ஸல்யம் நிக்ரஹாதிகளுடன் கலந்திருக்கிறது. இவள் அநுக்ரஹைகஸ்வபாவையாகையாலே இவளுக்கு வாத்ஸல்யம் அதிகம் என்பது 'வாத்ஸல்யாதிஶயத்தாலும்' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. அத்தலையில்—பகவான் விஷயத்தில். 'வால்லப்யாதிஶயத்தாலும்' என்பதினால் இவள் ரக்ஷிக்க வேண்டுமென்று சொல்லுகிற வார்த்தை அவனால் மறுக்கவொண்ணாதபடியாயிருக்கிறது என்பது த்யோதிதம். பகவானுக்கு வாத்ஸல்ய ஸௌஶீல்ய காருண்யாதி குணங்கள் இருக்குமேயானால் அவைகளைக் கொண்டு அவனை ரக்ஷகனாக மாட்டானே, ஆகையால் புருஷகாராபேக்ஷை வேண்டியதில்லையே, அப்படி இருந்தபோதிலும் புருஷகாரம் வேண்டுமென்னில் இவளை ஆஶ்ரயிப்பதற்கும் புருஷகாரம் வேண்டுமே என்கிற ஶங்கைக்கு ஸமாதானம் அருளிச் செய்கிறார்—'இவளை' என்றாரம்பித்து. தண்டதாத்வம் பகவானுக்கு மாத்திரம் அஸாதாரணமாகையினால் அவன் புருஷகாரமாகமாட்டான், இவளுக்கு அது இல்லாமையாலே, இவள் புருஷகாரமாகிறாள் ஆகையினாலேயே இவளுக்குப் புருஷகாராந்தராபேக்ஷையில்லை என்றபடி. அவன் தண்டதானானபோதிலும் நித்யமுக்தர்களைத் தன்

காரமாய்க்கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிறான் (4). இவனை புருஷகாரமாக்கவேண்டுகிறது ஸம்ஸாரன் த்யாஜ்யானுக்கையாலே (5). நிக்ரஹ காரணமாகியான ஆஜ்ஞாதிலங்கனம் (6). இப்படி அபராதங்களைப் பண்ணுகிற த்யாஜ்யராய்ப் போருகிற ஸம்ஸாரிகளுடைய வஶீகரணங்களில் ப்ரதானம் ஸர்வப்ரகார நாயிகாரமான ஆத்மரக்ஷாபர ஸமர்ப்பணம் (7). இது ஸர்வாதிகாரமாக ஸக்ருத்கர்த்தவ்யம் (8). இஸ்ஸமர்ப்பணத்தைத் தான் அநுஷ்டிக்கவுமாம், தனக்காக ஆசார்யாதிகள் அநுஷ்டிக்கவுமாம் (9). இதற்குக் கோ

டிக்கக் காணுமே? ஆகையால் தண்டதாத்வம் மாத்திரம் நிக்ரஹத்திற்கு எப்படிக் காரணமாகும்? என்கிற ஶங்கைக்கு ஸமாதானம் அருளிச் செய்கிறார்— 'நிக்ரஹ காரணம்' என்றாரம்பித்து. நிக்ரஹ காரணமாகிய ஆஜ்ஞாதிலங்கனம் அவர்களுக்கு இல்லாமையினால் அவர்களிடத்தில் நிக்ரஹம் உண்டாகாமல் போனபோதிலும் இவர்களிடத்தில் அது இருப்பதினால் நிக்ரஹமுண்டாகத் தட்டில்லையாகையால் இவர்கள் புருஷகார அபேக்ஷை பண்ணவேண்டியது அவஶ்யம் என்றதாயிற்று. இப்படி ப்ரணவார்த்தத்தை நிரூபித்தருளி பரஸமர்ப்பண பரமான யோஜனையில் ப்ரணவத்தில் விவக்ஷிதமாயும், ஸ்தூலயோஜனையில் நமஶ்ஶப்தத்திற்கு அர்த்தமாயும் இருக்கிற உபாய விசேஷத்தை அருளிச் செய்கிறார்—'இப்படி' என்றாரம்பித்து. 'வஶீகரணங்களில் ப்ரதான' மென்றது பக்தியோக நிஷ்டன் பக்தியோகத்திற்கு அங்கமாகவும், ஸ்வதந்த்ர ப்ரபத்திநிஷ்டன் மோக்ஷத்திற்கு ஸாக்ஷாதுபாயமாகவும் ப்ரபத்தியை அனுஷ்டிக்க வேண்டியிருப்பதினாலே வஶீகரணங்களில் ப்ரதானமானது ப்ரபத்தி என்றபடி. இனி ப்ரபத்தியின் ஸ்வரூபத்தை மூன்று வாக்யங்களினால் விசதமாக நிரூபித்தருளுகிறார்—'இது' என்றாரம்பித்து. இப்படிப் பத்து வாக்யங்களில் அநந்யாரக்ஷ்யத்வம், ஸ்ரீமத் ரக்ஷ்யத்வம், ஆசார்ய ரக்ஷண ப்ரகாரம், புருஷகாரத்வம், அநந்யோபாயத்வம் ஸாத்யோபாயா நுஷ்டானானர்ஹத்வம், அவித்யாதிரக்ஷ்யத்வம், ஸாக்ஷாதுபாயத்வம், ஸக்

லின ஸஹத்தைப்பற்ற வ்யாஜ: ப்ரவ்ருத்தி முதலான கர்த்ருத்வ தோஷமில்லை (10).

இப்படி க்ருதக்ருத்யனான பகவானுக்கு வர்ணாச்ரமோசிதங்கள் ஸ்வதந்த்ராஜ்ஞாலிங்கங்களான கைங்கர்யவிசேஷங்கள் (11). இவனுக்கு ஆஜ்ஞாநுஜ்ஞாலிங்கங்களான கைங்கர்யங்களெல்லாம் ஸ்வயம் ப்ரயோஜநங்கள் (12). கரணாகரணரூபங்களான அபசாரங்கள் புகுந்தாலும் பகவானுக்கு பாதகாதிகளில்லை (13). ராஜகுமாரனுக்கும் அபசாரம் பண்ணி நடக்கவேண்டு

குத் கர்த்தவ்யோபாயவத்வம், முதலிய அர்த்த விசேஷங்கள் அருளிச் செய்யப்பட்டதாகின்றன.

இனி கைம்ஸப்தம் முதலியவைகளின் அர்த்தங்களை ஸங்க்ரஹித்தருளுகிறார்—'இப்படி' என்றாரம்பித்து. 'இப்படி' இத்யாதி—எனக்கு ஸ்வாதந்த்ர்யமில்லையென்கிற யோஜனையில் ஸ்வதந்த்ரனுடைய ஆஜ்ஞையைப் பரிபாலனம் செய்ய வேண்டுமென்பது அர்த்தஸித்திக்கிறது என்று திருவுள்ளம். 'ஸ்வயம் ப்ரயோஜநங்கள்' என்பதற்கு எனக்கு ஒன்றையும் பற்ற நிருபாதிகசேஷத்வம் இல்லை என்கிற யோஜனையில் சேஷிக்கு அதிசயத்தை உண்டாக்குகையே சேஷபூதனுக்கு ஸ்வயம் ப்ரயோஜநமாகையினாலே ஆஜ்ஞாநுஜ்ஞா கைங்கர்யங்களினால் அவனுக்கு ப்ரீதியை உண்டாக்குகை இவனுக்கு ஸ்வயம் ப்ரயோஜநமாகிறது என்று தாத்பர்யம். எனக்கு ஒரு அநிஷ்டங்களும் இருக்கக் கூடாது என்கிற யோஜனையில் ஏற்பட்ட அர்த்த விசேஷங்களை நிரூபித்தருளுகிறார்—'கரணாகரண' என்றாரம்பித்து. கரணாகரணரூபங்களான—கரண—செய்வது, அகரண-செய்யாமல் இருப்பது, அதாவது நிஷித்தங்களை அனுஷ்டிப்பது, விஹிதங்களை விட்டு விடுவதாகிய என்றபடி. அப்படி, பாதகாதிகள் இல்லையே யாகில் புத்திபூர்வமாசரித்ததைப் பரிஹரிக்க வேண்டியதில்லையே என்பதற்கு ஸமாதானம் அருளிச் செய்கிறார் 'ராஜகுமாரனுக்

மைப்போலே ஸ்வாதந்த்ர்யமும் வாராமைக்காக அவதாரங்கள் த்ரிவிதாதிகாரிணியங்கள் (14). ஆபத்திக்குக் கோஷிணமனத்திற்கு ஒன்றாலும் ப்ரதிபந்தகமில்லை (15). வ்யவஸ்தாவ்யபசாரங்கள் புகுந்தாலும் ப்ராயஶ்சித்த விசேஷம் அதிகாரிவிசேஷ நியதம் (16). இப்படி ப்ராயஶ்சித்தத்திலே மூட்டுகிறதும் கதிநவத்ருகாதிகளுக்கு கைகாட்டுவாரைப்போலே அவன் பண்ணுகிற ஶிக்ஷைகளுமெல்லாம் ஸாரணாஜ்ஞாமைதமும் (17). இங்கிருந்தவரும்

ரும்' என்றாரம்பித்து. அவஸாநம் பண்ணி - ஸாவதாநத்தை செலுத்தி. இப்படி ஸுராத்பனாயமாகிலும் ஸம்பவிக்குமேயாகில் அதிலும் கோரின பலத்திற்கு ப்ரதிபந்தகம் கேவிலமே என்கிற ஶங்கையைப் பரிஹரித்தருளுகிறார்—'ஆபத்திக்கு' என்றாரம்பித்து. இப்படி ப்ரபத்திக்கு விரோதமில்லையென்னில் ப்ராயஶ்சித்தம் பண்ண வேண்டாவோ என்கிற ஶங்கையைப் பரிஹரித்தருளுகிறார்—'வ்யவஸ்த' என்றாரம்பித்து. அதிகாரிவிசேஷ நியதம் - ஒரு க்ஷண காலமும் பகவதப்ரீதியை ஸஹியாமை, ஶிஷ்டதயா ப்ரவிர்த்தனுமிருக்கை முதலிய அதிகாரி விசேஷங்களுக்குத் தக்கபடி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படி ப்ரபன்னனுக்கு அபசாரங்களும் ஶிக்ஷைகளும் ஸித்தமாயிருந்ததேயாகில் அகிஞ்சனர்கள் விஷயத்தில் அவனுடைய க்ருபையின் விசேஷத்திற்கு ப்ரயோஜனமென்ன என்னில், அருளிச் செய்கிறார்—'இப்படி' என்றாரம்பித்து. கதிநவத்ருகாதிகளுக்கு-ப்ராயஶ்சித்தத்தில் இழிவதற்கு அனுகுணமான அனுஷ்டாநங்கள் இல்லாதவர்களுக்கு. ஶிக்ஷைகள்-தண்டனைகள் என்றபடி. இனி தேவதாந்தரங்கள் க்ருதக்ஷேத்ராதிகள் எனக்கு போஷகங்களல்ல என்கிற மஹாகா நிவ்ருத்தியைச் சொல்லுகிற யோஜனையில் ஏற்படும் அர்த்த விசேஷங்களை நிரூபித்தருளுகிறார்-'இங்கு' என்றாரம்பித்து. இதுவும் பரமப்ரயோஜனமாகக் கடவது, ஸங்கல்பிக்கிற புருஷார்த்தத்திற்கு விரோதிகளாகவாகல் என்று நிரூபிக்கலாம். இங்கிருந்தவரும்

ஸ்வரூபாநுகூலமான போகத்திலும் போகவாஸனையாலே ப்ராவண்யம் பிறந்தால் இது தன்னதிகாராநுரூபமான கைங்கர்யரஸாநுபவத்திற்குத் தண்ணீர்த் துரும்பு (18). இப்படி நிஷித்தபோகப்ராவண்யம் கைங்கர்யரஸாநுபவவிரோதமாகையாலே விஷம்போலே தூரபரிஹரணீயம் (19). கைங்கர்யமாவது ஸ்வாமியுகந்தவேவற்றொழில்

ப்ராக்ருதமான தேஹத்துடன் இந்த விபூதியில் இருக்கும்பொழுது. **ஸ்வரூபாநுகூலமான போக**'மாவது தர்மஶாஸ்த்ரமாய் பகவதாராதன விநியுக்தங்களானவைகளை ஸாப்பிடுவது முதலியவை. அவைகளில் '**போகவாஸனையாலே ப்ராவண்யம் பிறக்கை**'யாவது இவை பசி நிவ்ருத்தியடைவது முதலிய நம்முடைய ப்ரயோஜனத்திற்கு ஸாதனங்கள் என்று அவைகளில் ஆசை உண்டாவது. '**தன்னதிகார**'மாவது 'தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே' இத்யாதிகளிற்படியே பகவானுடைய ப்ரீதியையே தனக்கு ப்ரயோஜனமாக நினைத்துக் கொண்டிருக்கை. தண்ணீர்த்துரும்பு-தண்ணீரில் துரும்பு இருந்தால் அது பானம்பண்ணுவதற்கு எப்படித் தடங்கலாகுமோ அதைப் போல கைங்கர்ய ரஸாநுபவத்திற்கு விச்சேதகம், அதாவது அவைகளும் பகவத் கைங்கர்யம் என்கிற புத்தியாலே அவைகளில் ப்ராவண்யம் உண்டானால் விரோதமில்லை என்றபடி. இதனால் நிஷித்தங்களான போகத்தைப் பரிஹரிக்கவேண்டுமென்பது கைமுதிக ந்யாய ஸித்தமாகிறது என்று நிரூபித்தருளுகிறார்—'இப்படி' என்றாரம்பித்து. '**நிஷித்தபோகப்ராவண்ய**'மாவது நிஷித்தாஹாராதிகளில் ஆசை. '**விரோதம்**' என்பதற்கு தத்காலத்தில் கைங்கர்யத்தையும் தடுத்து பின்பும் கைங்கர்யத்திற்கு அனர்ஹனும்படி பண்ணுகை. ஆதலால் ஶாஸ்த்ரீயநியமம் அவஶ்யம் அநுவர்த்தநீயமென்று ஸம்ப்ரதாயார்த்தத்தை நிகமித்தருளுகிறார்—'**கைங்கர்யமாவது**' என்றாரம்பித்து. ஏவல்தொழில்-பகவானால் ஆஜ்ஞாபிக்கப்பட்ட கைங்கர்யம். இனி சதுர்த்தியின் அர்த்தமாகிய புருஷார்த்தமென்னப்படும் கைங்கர்யத்தைப் ப்ரமாணவாக்யங்களினால் நிரூபித்-

செய்கையாகையாலே இது யதாஸாமர்த்யம் பண்ணினாலும் அபாபம் (20). ஸமவஸ்தகைங்கர்யமும் ஸாமவதகைங்கர்யமும் சேர ஸம்பாதிக்க அரிதானபோது ஸர்வோபகாரகமான ஸாமவதகைங்கர்யமே உபாதேயதமம் (21). இவையிரண்டிலும் அயாதஶோபாயகைங்கர்யமும் (22). இக்கைங்கர்யவானுக்கு பரமைகாந்திகளுகந்த இடமே உசிதஸ்தானம் (23). இப்படி தாத்ருஶீலரைக் கிடையாதபோது விபரீதஸம்ஸர்க்கமும் ஸாகாஜவாஸ

தருள உபக்ரமித்து கைங்கர்யங்களில் உபாதேய உபாதேயதமாதி விபாகங்களை அருளிச்செய்கிறார்—‘ஸமவஸ’ என்றாரம்பித்து. இப்படிப் பகவத்பாகவத ஆசார்ய கைங்கர்யங்களில் ப்ரதாந ப்ரதாந விபாகங்களைப் பண்ணி ஸாதநமான கைங்கர்யத்தில் ஆசை உடையவனுக்கு வஸிக்கவேண்டியதான ஸ்தானவிசேஷத்தை நிரூபித்தருளுகிறார்—‘இக்கைங்கர்யவானுக்கு’ என்றாரம்பித்து. அதாவது கீழ் நிரூபித்தபடி மூன்றுவிதக் கைங்கர்யங்களில் தன்னால் ஸாத்யமான கைங்கர்யத்தில் நிஷ்டை உடையவனுக்கு. ‘பரமைகாந்திகள்’ என்றது அந்தக்கைங்கர்யரஸத்தை வ்ருத்திபண்ணக்கூடிய பரமைகாந்திகள் என்றபடி. இவ்விடத்தில் ‘ஸாரவொயதுவஜ்ஞை’ இத்யாதிகள் அநுஸந்தேயங்கள். மேல் ‘தாத்ருஶீலரைக் கிடையாதபோது’ என்றருளிச் செய்திருப்பதினால் இங்கு ‘பரமைகாந்திகள்’ என்றதும் துல்யஶீலரான பரமைகாந்திகளையே திருவுள்ளத்தில் கொண்டு அருளிச்செய்தபடி. இப்படித் துல்யஶீலரான பரமைகாந்திகள் யுகஸ்வபாவாதிகளால் துர்லபராயிருப்பதைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார்—‘இப்படி’ என்றாரம்பித்து. ‘தாத்ருஶீலரைக் கிடையாதபோது’ என்றது பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்யங்களில் தன் நிஷ்டைக்குத் துல்யஶீலரானவர்கள் துர்லபரானபோது என்றபடி. ‘விபரீதஸம்ஸர்க்கமும்’ என்றது பகவத் த்வேஷிகள், பாகவதத்வேஷிகள், ஆசார்யத்வேஷிகள். இவர்களுடைய ஸஹவாஸம் என்றபடி. ‘ஸாகாஜ

பரிஹார்யஞ்ச (24). இவனுக்கு மதிவிஷநாதிகள் சித்த ஸந்தோஷஹேதுவான காலயாபநம் (25). சாதக வ்ருத்தியான இவனுக்கு அந்திமப்ரத்யயம் ஸ்வயத்நஸாத்யமன்று (26). இப்படி க்ஷணகர்த்தவ்யமான ஆத்மஸமர்ப்பணமாத்திரத்திற்கு ஸமவஸ்வஸத்ருஸ்வாரஸ்யமான ஷோடசவர்ஷ

சாஸ்த்ர பரிஹார்யஞ்ச' என்றது அவர்கள் ஸம்ஸர்க்கம் இல்லாத இடத்தில் தான் தனியே இருந்து பரிஹரிக்கத்தக்கது என்றபடி. இங்கிருந்தகாலம் இவன் பண்ணுகிற அநுரூபமான கைங்கர்யத்தை அருளிச் செய்கிறார்— 'இவனுக்கு' என்றாரம்பித்து. 'ஆதி' சப்தம் இங்கு பகவான் முதலியவர்களுடைய அவதார சரித்திர குணவிசேஷாதிகளை அநுஸந்திக்கதலைக் குறிக்கிறது. அந்திம ப்ரத்யயம் எல்லா அதிகாரிகளுக்கும் ஆவச்யகமானபடியாலே அது இவனுக்கு ஸ்வயத்ந ஸாத்யமாகும் பக்ஷத்தில் சுதி சிந்தனாதிகள் சித்த ஸந்தோஷ ஹேதுவான காலயாபனமாகக்கூடுமோ? அவச்யம் கர்த்தவ்யம் அன்றோ? என்னில், அருளிச்செய்கிறார்—'சாதக வ்ருத்தியான' என்றாரம்பித்து. 'சாதகவ்ருத்தி'யாவது சாதகபக்ஷி தான் தண்ணீர் குடிப்பதற்கு ப்ரயத்னம் செய்யாமல் மேகங்கள் வர்ஷிப்பதையே எதிர் பார்த்திருக்கிறாப்போலே ஸ்வப்ரயத்னமில்லாமல் அவன் க்ருபையையே எதிர்பார்த்திருத்தல். 'ஸ்வயத்நஸாத்யமன்று' இத்யாதி—இவ்விஷயத்தில் ஸூக்தர்களுக்குள்ளேயே அந்திம ப்ரத்யயம் வேண்டுவதில்லை யென்றும், வேண்டியதாயிருந்தாலும் பகவத் க்ருபையினால் தானே வந்து விடுகிறதென்றும் இரண்டுவிதமான தாத்பர்யபேதமிருக்கிறபடியினால் அவை இரண்டுக்கும் பொதுவாக இப்படி அருளிச்செய்தபடி. ஆதலால் அந்த அந்திம ப்ரத்யயத்திற்காக இவன் சுதி சிந்தனாதிகள் பண்ணவேண்டியதில்லை என்றதாயிற்று. இப்படி ப்ரபன்னனானவனுக்குப் பரமபலம்வரும் காலத்தை நிர்தேசித்தருளுகிறார்— 'இப்படி' என்றாரம்பித்து. இப்படிப் பரமபுருஷார்த்தத்தை நிரூபித்துக் கீழ் ஸம்ஸாரியாய் இருந்த தசைக்கும் பரம புருஷார்த்தத்தை அடைகிறதற்கும் தசைக்கும் வ்யத்யாஸத்தை அருளிச்செய்வதற்காகப் பூர்வ மத்யம உத்தர தசைகளை

ஹ்ருதயம் (27). ஸ்தாவராதி பூர்வ ஸ்ருஷ்டத்திற்கு முன்புள்ள அநாதிகாலமெல்லாம் ஒரு காளராத்ரி (28). பின்பு தேஹாவஸாநந்தனையும் நல்விடிவு (29). மேல் முழுக்க ஸ்வச்சந்த கைங்கர்ய பூர்ண போக்ய திவஸம் (30). இது ஸாத்விக ஹ்ருதயங்கமமான ரஹஸ்யரத்நாவளி.

சிறுபயனிற்படியாத தகவோரெம்மைச்சேர்க்க
வடைக்கலங்கொண்ட திருமால்தானே
மறுபிறவியறுத்தழியாவானில் வைக்குமனமே
மகிழாதேயிருப்பதென்சொல்?

நிரூபித்தருளுகிறார்-'ஸ்தாவராதி' என்றாரம்பித்து மூன்று வாக்யங்களினால். 'காளராத்ரி' என்றது மிகவும் ஜ்ஞாநஸங்கோசத்தைக் கொடுக்கிறபடியினால் ராத்திரியைப்போல் அந்தகாரம் நிறைந்திருக்கிறது என்றபடி. 'நல்விடிவு' என்றது அத்யந்த ஜ்ஞாநஸங்கோசமில்லாமலும் ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரிக்கக்கூடியதான ப்ரகாசமும் இல்லாமல் இருக்கிற தசை என்றபடி. இங்கு 'நல்' என்பதினால் மேல் பரமபுருஷார்த்தத்தை அடைவதற்கு ஸாதனமாயிருப்பது விவக்ஷிக்கப்பட்டதாகிறது. 'மேல் முழுக்க' என்றது காலதத்வமுள்ளவரையில், அதாவது அந்தமில்லை என்றபடி. 'ஸ்வச்சந்த கைங்கர்யமும்' என்றது பகவத் ஸங்கல்பத்தை அநுஸரித்துத் தன் இஷ்டப்படி செய்கிற கைங்கர்யங்கள் என்றபடி. இப்படித் தத்வ ஹித புருஷார்த்தங்களை நிரூபித்து இதின் போக்யதையை அருளிச்செய்து நிகமித்தருளுகிறார்—'இது' என்றாரம்பித்து.

கீழ் முதல்பாட்டில் 'நமக்குப் பரமொன்றிலதே' என்று ஸங்க்ரஹமாக நிரூபித்தருளின அர்த்தத்தை நிகமனத்தில் விஸ்தாரமாக அருளிச்செய்கிறார்—'சிறுபயனில்' என்றாரம்பித்து.

[ப - ரை.] சிறுபயனில் - க்ஷுத்ரங்களான (அல்பங்களான) க்யாதிலாப பூஜாதி ப்ரயோஜனங்களில், படியாத - ஸ்வீக்ருதராகாத, தகவோர் - க்ருபையை உடையவர்களான ஆசார்யர்கள், எம்மை - ஆச்ரயித்த நம்மை, சேர்க்க - (பகவானுடைய திருவடிகளில் ரக்ஷ்ய

உறுவதுனக்குரைக்கே னிங்கிருந்தகாலமொரு
பிழையும்புகுராத வுணர்த்திவேண்டிப்
பெறுவதெல்லாமிங்கே நாம் பெற்றுவாழப்
பேரடிமையா லேதென்றிகழேனீயே. 19

ரக்ஷம் ஶடாந் ந்யாஸக்ஷ்யாம் ஶ்ரீயதீஶே ஶ்ரியம் ஸஜ: ।
ஶுக்தி:ஸஹாயஹ்ருத்யாம் ரஹஸ்யரத்நாவலீம் ரசேத் ॥

இதி ஶ்ரீ கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஶ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஶ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
॥ ஶ்ரீமத் ரஹஸ்யரத்நாவலீஸம்பூர்ணா ॥



வஸ்துவாக) ஸமர்ப்பிக்க, அடைக்கலம் கொண்ட - ரக்ஷ்யவஸ்துவாக அங்கீகரித்த, திருமால் - ஸ்ரிய:பதி, தானே - ஸ்வயமாகவே, மறுபிறவி - இன்னொரு ஜன்மத்தை, அறுத்து - போக்கடித்து, மறு ஜன்மம் வராமல் செய்து என்றபடி, அழியா - நசிக்காத, வானில் - பரமபதத்தில், வைக்கும் - சேர்த்து விடுவன், மனமே - மனதே, நீ - இப்படி ஸ்ரிய:பதிக்குப் பரிகரமான நீ, மகிழாதே - ஸந்தோஷப்படாதே, இருப்பது, என்கொல் - எதற்காக? ஸந்தோஷப்பட வேண்டிய ஸமயத்தில் ஸந்தோஷப்படாமல் இருப்பது எதற்காக என்றபடி, உனக்கு, உறுவது - உசிதமானது, உரைக்கேன் - சொல்லுகிறேன், இங்கிருந்தகாலம் - இந்த விபூதியில் இருக்கும் ஸமயத்தில், ஒருபிழையும் - ஒருவித அபராதமும், புகுராத - ப்ரவேசிக்காத, உணர்த்தி - ஜ்ஞானத்தை, வேண்டி - அபேக்ஷித்து, அதாவது நிரபராத கைங்கர்யத்திற்கு உபயோகமான பக்தி ஜ்ஞானங்களை ப்ரார்த்தித்து என்றபடி, பெறுவதெல்லாம் - பெறக்கூடிய புருஷார்த்தங்களையெல்லாம், இங்கே - இந்த விபூதியிலேயே, நாம், பெற்று - அடைந்து, வாழ - வாழ்ந்து கொண்டிருக்க, பேரடிமையால் - இப்பொழுது செய்கிற விசேஷ கைங்கர்யங்களினால், ஏது - என்ன ப்ரயோஜனம், என்று நீ, இகழேல் - கையில்கிடைத்த கைங்கர்யங்களை இகழாதே. 19

இப்படித் தாம் அருளிச்செய்த ஸ்ரீமத் ரஹஸ்ய ரத்நாவளியை ஸத் புருஷர்கள் ஸேவித்து வாழவேண்டுமென்று அருளிச்செய்கிறார்— 'ரக்ஷந்து' என்றாரம்பித்து.

[ப - ரை.] **க்ஷீயஸீஷ்வபி** - அளவில் சிறியதாயிருந்த போதிலும், **பூயஸீம்** - அர்த்தத்தினாலும் ப்ரயோஜனத்தினாலும் பெரியதாயும், **அல்பை ரக்ஷ்யாம்** - அல்ப ப்ரயோஜனர்களால் ரக்ஷிக்கக் கூடியதும், **ஸூக்ஷ்ம ஸஹாய ஹ்ருத்யாம்** - ஸ்ரிய:பதிக்கு ஹ்ருதயங்கமமான, **ரம்யாம்** - அழகான, **ரஹஸ்ய ரத்நாவலீம்** - ரஹஸ்ய ரத்நாவளீ என்னும் க்ரந்தத்தை, **ஸந்த:** - பெரியோர்கள், **ரக்ஷந்து** - ரக்ஷிக்கக் கடவர்கள், அன்றிக்கே **க்ஷீயஸீஷ்வபி**, **பூயஸீம்** - அதிகப்பணம் பெறக்கூடிய, **ஸூக்ஷ்ம ஸஹாய ஹ்ருத்யாம்** - விசேஷ தனமுடையவர்களால் மார்பில் தரிக்கக் கூடியதான, **ரம்யாம்**, **ரஹஸ்ய ரத்நாவலீம்** - ரத்நஹாரத்தை, பெரியோர்கள் ரக்ஷிக்க வேண்டும் என்றுமாம்.

ஸ்ரீமத் ரஹஸ்ய ரத்நாவளீ வ்யாக்யானம் முற்றிற்று.